IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.144/2023

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | THIRUKKUMARAN |
| FATHER'S NAME | : | RAJA |
| VILLAGE | : | GIRISAMUTHIRAM |
| OCCUPATION | : | PRIVATE |
| AGE | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 22nd day of October 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து தனியாரில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனக்கு அக்கா முறை ஆவார். அ.சா.2 லட்சுமி எனக்கு பெரியம்மா ஆவார். கடந்த 16.01.2022 அன்று காலை 10.00மணியளவில் எனது அக்கா எனக்கு போன் செய்து அவரது கணவர் மற்றும் மாமனாரும் அடித்துவிட்டதாகவும், அவராகவே 108 ஆம்புலன்சுக்கு போன் செய்து அரசு மருத்துவமனையில் சிகிச்சயையில் சேர்ந்ததாகவும் கூறினார். நான் 18.01.2022 அன்று அவரை அரசு மருத்துமவனையில் சென்று பார்த்தேன். அவரை டிஸ்சார்ஜ் செய்து 18.01.2022 அன்று குடயாத்தம் அனைத்து மகளிர் காவல் நிலையதத்தில் புகார் அளித்தோம். வழக்கு சம்பந்தமாக என்னை போலிசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் குறித்து எனக்கு போன் மூலமாகதான் தெரியும். சம்பவம் குறித்து எனக்கு தகவல் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். சம்பவம் குறித்து தகவல் தெரிந்த பின்னர் தான் நான் குடியாத்ததிற்கு வந்தேன் என்றால் சரிதான். நான் வந்த பிறகு நானும், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய மூவரும் சேர்ந்து குடியாத்தம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம் என்றால் சரிதான். சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்ல என்றாலும், அ.சா.1 சொல்லி தான் தெரியும் என்றாலும் சரிதான். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது உறவினர்கள் என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது உறவினர்கள் என்பதாகல் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தமான போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.